VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
Published 1-7th (1st Week) Every Month






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To　　　　　　　　　　Printed Matter


If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி
## செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

| மலர்:4 | இதழ்:5 | பிப்ரவரி:2020 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
|---|---|---|---|---|
| Volume:4 | Issue:5 | February:2020 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |



**SHRI MAHA MERU MANDALI TRUST**

Reg. No. DIT (E) No.2 (651) / 12-13 / Sl. No. 90 / 13-14

Shri G.S. Venkataraman
Author

Shri S. Suga, Smt. B. Indira Balaji, Shri. R.V. Sathyanarayana,
Shri. J. Sathish, Sow. G.V. Mahasree Neela
Trustees

Shri N. Subramaniam
Managing Trustee


09.11.2019

அன்புடையீர்,

ஸ்ரீ மஹாமேரு மண்டலியின் ஆன்மீக நிகழ்வுகளில் தாங்கள் ஏற்கனவே பங்கு கொண்டு சிறப்பித்துள்ளீர்கள். கடந்த 28.10.2019 முதல் ஸ்ரீ மகாமேரு மண்டலியில் காலை 7.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை நாள்தோறும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணமும், ஸ்ரீ துர்கா சப்தமதி பாராயணமும் லோக க்ஷேமத்திற்காக நடைபெற்று வருகிறது. இந்த பாராயணங்கள் வரும் 23.3.2020 வரை நடைபெற உள்ளது.

இந்த பாராயணங்களில் தாங்களும் கலந்து கொண்டு பரதேவதையின் அனுக்கிரஹத்தை பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம் தனியாகவும் குழுவாகவும் வந்து பாராயணம் செய்யலாம்.

தாங்கள் வரும் விபரத்தை முன்கூட்டியே தெரிவித்து தொடர் பாராயணம் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக் கொள்கிறோம் மேற்கொண்டு விபரங்கள் அறிய கீழ்க்கண்டவர்களை தொடர்பு கொள்ளவும்.

1. ஸ்ரீமதி ராஜேஸ்வரி ஸ்ரீராம் 8939731326
2. ஸ்ரீமதி இந்திரா பாலாஜி 9444060346
3. ஸ்ரீமதி கிருஷ்ணப்ரியா ஜெயகுமார் 9442266120

இப்படிக்கு
**N.சுப்ரமண்யம்**
நிர்வாக அறங்காவலர்

பெறுநர்:


81/1, Mannappan Street, Kottur, Chennai - 600 085
Tel : 044-2447 4744





# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 98402 43592, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்

## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

Contributions can be sent to :
A/c Name : Anatha Pretha Kainkarya Trust
A/c No : 0917101048528 / IFCCode : CNRB0000917
K. JAYARAMAN, Trustee / Treasurer
No.3, Mullai Street, Balaji Nagar, Adambakkam, Chennai - 600 088.
Cell : 9840045776 / Email : jayaraman2212@gmail.com




# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**
வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்
மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

### வேதமந்திரம் - 5

தெய்வத்திடம் மூன்று ப்ரார்த்தனைகள்

**அஸதோ மா ஸத்3 க3மய**
**தமஸோ மா ஜ்யோதிர்க3மய**
**ம்ருத்யோர் மா அம்ருதம் க3மய**
**-ப்3ரஹதா3ரண்யகோபநிஷத்.**

பொருள்:

ஓ பகவானே! எங்களை அஸத்தியத்திலிருந்து ஸத்யத்திற்கு அழைத்துச் செல். இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல். மரணத்திலிருந்து மரணமிலாப் பெருவாழ்விற்கு அழைத்துச் செல்.

இவை முமுக்ஷுக்கள் (விடுதலை விரும்பிகள்) பகவானிடம் செய்யக் கூடிய மூன்று ப்ரார்த்தனைகள் ஆகும்.

பரமாத்மனை ப்ரார்த்திக்கக் கூடிய மங்களமான சாந்தி மந்திரம்.

## வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 4 இதழ்: 5

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**

**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**Published on : 1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**


## புத்தகத்தின் உள்ளே


ஒரு நிமிடம் உங்களோடு 5
மாசி மாத விஷேசங்கள் 6
அட்டைப்பட விளக்கம் 7
பிரதக்ஷிணம் 11
சுபாஷிதம் 15
தர்மத்தின் குரல் 14
பெற்றோர்களே கவனியுங்கள் 16
தெரிந்து கொள்வோம் 18
ஸ்ரீமத் பகவத்கீதை 19
புதுவைக்கிளையின்மார்கழி பஜனை 21
சிருங்கேரி மஹா சுவாமிகள் 27
ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கு 28
பழமொழிகளும் உண்மையான
அர்த்தங்களும் 32
வியக்கவைக்கும் எண்கள் 33
சந்த்யா வந்தன போட்டி 2020 34
குழந்தைகள் பகுதி 36
நல்லறமாய் ஒரு இல்லறம் 41



புத்தக வடிவமைப்பு :

**ரெம்ஸ் பிரிண்டர்ஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**




# ஒரு நிமிடம் உங்களோடு

பரத்வாஜ் மஹரிஷியின் மகன் **"கர்கர்",** ("கர்க மஹரிஷி") முற்காலத்தில் ஜோதிட சாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்து மக்களின் எதிர் காலத்தைத் தெளிவாக தெரிவிக்க பாடுபட்ட மஹரிஷிகளில் **"கர்க மஹரிஷி"** முதன்மையானவர். இவரிடம் ஜோதிட கலைகளை கற்ற இவருடைய சிஷ்யன் ஒருவன் மஹரிஷியின் ஆசீர்வாதத்துடன் தன் இல்லம் திரும்பினான். ஆனால் சிறிது காலம் சென்றவுடன் அவனுக்கு பல பிரச்சனைகள் வந்துவிட்டன. உடனே அவன் தன் குருவிடம் வந்து தனக்கு பிரச்சனைகள் மாறி மாறி வந்துக்கொண்டே இருக்கிறதாகவும், தான் படித்த ஜோதிடம் இதற்கு உதவவில்லையே என்றான். இதைக்கேட்ட குரு அவனிடம் "பிரச்சனை இல்லாத வாழ்க்கை ஒரு மனித ஜீவிதத்தில் இருக்காது. மனிதன் தாயின் கர்ப்பப்பையிலிருந்து வரும்போது தனியாக வருவதில்லை பிரச்சனைகளோடுதான் வருகிறான். ஒருவனுக்கு சிறு வயதில் வரும் பிரச்சனைகளை அவனுடைய தாய் தந்தையர் தீர்த்துவிடுகிறார்கள். இளம் வயதில் பிரச்சனைகள் வந்தால் "ஒரு கை பார்த்துவிடலாம்" என்ற வேகத்தில் அதை எதிர்த்து போராடி வெற்றி பெறுகிறான். ஆனால் உடனே அடுத்த பிரச்சனை வந்துவிடுகிறது. பிரச்சனைகளுக்கு அழிவே கிடையாது. பிரச்சனை இருந்தால்தான் வாழ்க்கை" என்று கூறிவிட்டு "அதற்கு நீ மனதை திடமாக வைத்துக் கொள்ளவேண்டும். அதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று எது வந்தாலும் அதை உதாசீனம் பண்ணவேண்டும். இரண்டாவது அதை வாங்கி விழுங்கிவிட வேண்டும். இதற்கு மனதை திடம் பண்ணிக்கொண்டு தினமும் நல்ல நடைமுறைகளை கடைப்பிடிப்பது பகவத் தியானத்துடன் இருப்பது, கடமைகளை நிறைவேற்றுவது என்று இருக்க வேண்டும். பிரச்சனைகளைக் கண்டு ஓடக்கூடாது" என்று கூறினார்.

நம்முடைய வாழ்க்கையிலும் ஜோதிட சாஸ்திரம் நமக்கு ஏதாவது நல்லது நடக்கப்போகிறது என்று கிரஹங்கள் காட்டினால் அதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் மேற்கொண்டால்தான் அது நமக்கு நடக்கும். முயற்சி

செய்யாவிட்டால் அது கட்டாயம் நடக்காது. முயற்சியை விட்டுவிட்டு வெறும் அதிர்ஷ்டத்தை மட்டும் நம்பியிருந்தால் அந்த அதிர்ஷ்டம் நம்மைக் காப்பாற்றாது. கண்களுக்கு புலப்படாத ஒரு சக்திதான் "அதிர்ஷ்டம்" ஒரு லட்க்ஷம் ரூபாய் லாட்ரியில் அடிக்க வேண்டுமானால் நாம் ஒரு ரூபாய் கொடுத்து லாட்ரி டிக்கட் வாங்கியாக வேண்டும். டிக்கட் வாங்காமல் லாட்ரி அடிக்காது. அதனால் பிரச்சனைகள் வந்தால் பயப்படக்கூடாது. அதை ஏற்றுக்கொள்ள மனதை திடம் பண்ணிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதை உதாசீனப்படுத்த கற்றுக்கொண்டால் நமக்கு ஜெயம் உண்டாகும்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

## மாசி மாத விசேஷங்கள்
### (பிப்ரவரி 13.02.2020 முதல் மார்ச் 13.03.2020 வரை)

| | | |
|---|---|---|
| 13.02.2020 | வியாழக்கிழமை | சபரிமலை நடை திறப்பு |
| 18.02.2020 | செவ்வாய்கிழமை | ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜெயந்தி |
| 19.02.2020- | புதன்கிழமை | ஸர்வ விஜயா ஏகாதசி |
| 20.02.2020 | வியாழக்கிழமை | பிரதோஷம் |
| 21.02.2020 | வெள்ளிக்கிழமை | மஹா சிவராத்திரி - காஞ்சி ஸ்ரீ விஜேயந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஜெயந்தி |
| 23.02.2020 | ஞாயிற்றுக்கிழமை | அமாவாசை |
| 01.03.2020 | ஞாயிற்றுக்கிழமை | சஷ்டி விரதம் |
| 05.03.2020 | வியாழக்கிழமை | ஏகாதசி |
| 06.03.2020 | வெள்ளிக்கிழமை | வைஷ்ணவ ஏகாதசி |
| 07.03.2020 | சனிக்கிழமை | சனிப் பிரதோஷம் - காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திரர் சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை |
| 08.03.2020 | ஞாயிற்றுக்கிழமை- | மாசி மகம், சபரிமலை நடை அடைப்பு |
| 09.03.2020 | திங்கட்கிழமை | பௌர்ணமி, ஹோலிப்பண்டிகை |
| 12.03.2020 | வியாழக்கிழமை- | சங்கடஹர சதுர்த்தி |
| 13.03.2020 | வெள்ளிக்கிழமை | சபரிமலை நடைதிறப்பு |



# அட்டைப்பட விளக்கம்
## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். இவரைப்பற்றி அறியாதவர்கள் உலகில் மிகக் குறைவே எனலாம். உலகில் மக்களை நல்வழிப்படுத்த இறைவனே அவ்வப்போது மனித உருவில் அவதாரம் எடுத்து மக்களை நல்வழிப்படுத்துவார். இதை பகவான் ஸ்ரீகிருஷ்ணரே கீதையில் குறிப்பிடுகிறார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் இறைவனின் திருஅவதாரமே என்பதில் சந்தேகமில்லை.

வங்காள மாநிலத்தில் ஹூக்லி மாவட்டத்தில் தேரேய்பூர் என்னும் கிராமத்தில் பூஜை, ஆசாரம். அனுஷ்ட்டானானங்களோடு வாழ்ந்துவந்தவர் சுதிராம். வைஷ்ணவரான இவருடைய குலதெய்வம் ஸ்ரீராமர். இருந்தாலும் இவருடைய குடும்பம் சிவபெருமானையும் மனமுருகி வணங்கி வந்தனர். சுதிராம் தம்முடைய 25 ஆவது வயதில் 1799 ஆம் ஆண்டு சந்திரமணி தேவி என்ற பெண்ணை மணந்துக்கொண்டார். அவரை "சந்திரா" என்று அனைவரும் சுருக்கமாக அழைப்பார்கள். இவர்களுக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் பிறந்தார்கள். இவர்களுடைய குடும்பம் மிகவும் வறுமையிலேயே வாழ்ந்து வந்தது. இருப்பினும் சுதிராம் மனம் முழுவதையும் பகவானிடம் திருப்பி எந்தநேரமும் அவரையே நினைத்து தவ வாழ்க்கையில் மூழ்கினார்.

1835 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் "கயா" சென்று அங்கு "கதாதரர்" என்று அழைக்கப்பட்ட விஷ்ணு கோயிலுக்குச் சென்று திருமாலின் பாத கமலங்களை வணங்கிவிட்டு தன்னுடைய முன்னோர்களுக்கு பிண்டம் இட்டார். அன்று இரவு அவர் உறங்கும்போது அவர் கனவில் ஒரு ஒளிமிக்க தெய்வீக வடிவம் தோன்றி "சுதிராம், உன் பக்தியைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன். நல்லோர்களைக் காக்கவும், தீயோர்களை அழிக்கவும் நான் மீண்டும், மீண்டும் பூமியில் அவதரிக்கிறேன்.

இந்த முறை உன் குடிசையில் பிறந்து உன்னைத் தந்தையாக ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி மறைந்துவிட்டது. அதே நேரத்தில் அவருடைய மனைவி சந்திரா தேவியும் தன் கனவில் அவருடைய கணவரைப்போலவே தோற்றம் அளித்த ஒளிமையமான வடிவம் தன் பக்கத்தில் இருப்பதைப் போல கண்டார். அந்த ஒளி அவரை மூழ்கடித்து அவர் வயிற்றுக்குள் சென்று தங்கியது.

சுதிராமும், சந்திரா தேவியும் காத்திருந்த அந்த நாள் வந்தது. 18.02.1836 வியாழக்கிழமை பகவான் சந்திரா தேவியின் வயிற்றில் அவதரித்தார். சுதிராம் தான் "கதாதரன்" கோயிலில் கண்ட கனவின் நிவைாக குழந்தைக்கு "கதாதரன்" என்று பெயர் சூட்டினார். குழந்தை பிறந்த நாளிலிருந்தே பல்வேறு அதிசய நிகழ்ச்சிகள் நிகழலாயின. பெற்றோர்களையும், உறவினர்களையும், கிராம மக்களையும் தன்பால் கவர்ந்திழுக்கும் மோகன சக்தியை படைத்தவனாக விளங்கினான். ஆறு மாதத்தில் அன்னம் அளிக்கும் விழா நடைபெற்றது. சிறு வயதிலேயே ஆடல், பாடல்களிலும், தெய்வங்களின் படங்களை வரைவதிலும் களிமண்ணில் கடவுள்களின் சிலை செய்வதிலும் மிகவும் ஆர்வமாக இருந்தான். கதாதரனுக்கு ஒன்பதாவது வயதில் உபநயனம் நடைபெற்றது. அவர் பள்ளி செல்ல மறுத்தார். ஆனால் ஆன்மீக விஷயங்களில் ஆழ்ந்த ஞானம் உடையவராக இருந்தார். ராமர், கிருஷ்ணர் வேடங்கள் இட்டு நாடகங்களில் நடித்தார். கதாதரர் மிகவும் சிறியவனாக இருந்தபோது அவரது தந்தை காலமாகிவிட்டார். அதன் பின் அவர் தன் தாய் சந்திரமணி, அண்ணன் ராம்குமார் ஆகியோரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். கதாதரனின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு கவலை கொண்ட அவருடைய அண்ணன் அவரை அவருடைய 17வது வயதில் கல்கத்தா அழைத்துச் சென்றார். அங்கு அண்ணனுக்கு உதவியாக வீடுகளில் பூஜை செய்துவந்தார்.

**"கதாதரர்"** என்ற பெயர் எப்படி **"ராமகிருஷ்ண பரமஹம்சர்"** என்று மாறியது என்பது குறித்து முரண்பட்ட பல தகவல்கள் காணப்படுகின்றன.



1856-ம் வருடம் ராமகிருஷ்ணருடைய அண்ணன் வேலை நிமித்தமாக **"முலாஜர்"** என்ற ஊருக்கு சென்றபோது அங்கேயே காலமானார். அதன் பின் ராமகிருஷ்ணர் தட்ஷிணேஸ்வரம் பவதாரணி காளி கோயிலில் காளிக்கு தினந்தோறும் பூஜை செய்துவந்தார். அன்னையை நேரில் காணவேண்டும் என்ற ஆவல் தீவிரமாக இருந்தது. தனக்கு காட்சி அளிக்குமாறு காளியிடம் தினமும் மனமுருக பிரார்த்தனை செய்துவந்தார். தினமும் இரவு நேரங்களில் அருகில் இருந்த காட்டுப்பகுதியில் காளியை நினைத்து தியானம் செய்தார். எனினும் காளி அவருக்கு காட்சி அளிக்கவில்லை. ஒரு நாள் பொறுமையை இழந்த அவர் காளியின் கையில் இருந்த வாளினால் தன்னைத்தானே மாயத்துக் கொல்ல முயற்சித்தார். உடனே அவர் சுய நினைவு இழந்ததாகவும், ஒரு பேரானந்த ஒளி அவரை ஆட்கொண்டதாகவும் அவரே பின்னர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பிறகு ராமகிருஷ்ணருடைய நடவடிக்கைகள் அசாதாரணமாக இருந்தன. இதைக்கண்ட அவருடைய தாயார் அவருக்கு திருமணம் செய்து வைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தார். இராமகிருஷ்ணரும் இதற்கு மறுப்பு தெரிவிக்காமல் இருந்ததோடல்லாமல் **ஜெயராம்பாடி** என்ற ஊரில் **"சாரதாமணி"** என்ற **ஐந்து** வயது பெண் இருப்பதாகவும், அந்த பெண்ணே தன்னை மணந்துக்கொள்ள பிறந்தவள் என்று கூறினார். அதன்படியே அவருடைய இருபத்து மூன்றாம் வயதில் சாரதாமணியை திருமணம் செய்து கொண்டார். தன் மனைவியை காளியின் வடிவமாகவே நினைத்து அவரை அலங்கரித்து அவருக்கு பூஜை செய்து அவருடைய கால்களில் விழுந்து வணங்கினார். தாம்பத்யம் ஏற்காமல் மனைவியை தாயாக மதித்து தெய்வீக வாழ்வு நடத்தினார். வேதாந்த உண்மைகளைக் கண்டறிந்தவர் மட்டுமல்ல, பிறருக்கு அதை உணர்த்துவதிலும் வல்லமை படைத்தவராக விளங்கினார். பாமரர் முதல் பண்டிதர் வரை அனைவரின் மனத்திலும் ஆன்மீக விளக்கெரிய தூண்டுதலாக அமைந்தவர்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் கடைசி நாட்களில் தொண்டைப் புற்று நோய் அவரைத் தாக்கி மிகவும் கஷ்டப்பட்டார். அவர் 16.08.1886 அன்று தம் பக்தர்களும், சீடர்களும் துன்பத்தில் மூழ்க மகா சமாதி அடைந்தார்.

**ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிந்தனைத் துளிகளில் ஒரு சில :**

1. **கர்மமார்க்கம், ஞானமார்க்கம், பக்திமார்க்கம் இப்படி எந்த வழியிலும் இறைவனை அடைய முடியும்.**
2. கடவுள் எல்லா மனிதர்கள் இடத்திலும் உள்ளார். ஆனால் எல்லா மனிதர்களும் கடவுள் இல்லை.
3. அறியாமையின் காரணமாகத்தான் அகம்பாவம் மனிதனுக்கு ஏற்படுகின்றது. அந்த அகம்பாவம் மனிதனை அழிக்கின்றது.
4. உண்மையாய் எளிமையாய் இறைவனிடம் வேண்டினாலே போதும் இறைவனுக்கு கேட்கும்.
5. உடம்பு என்று இருந்தால் நோய் என்பது நிச்சயமாக வரும். இது இயற்கை. இந்த உடம்பு சிறு சிறு அணுக்களால் ஆக்கப்பட்டிருப்பதை நான் காண்கிறேன்.

இந்த வருடம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 185வது ஜெயந்தி **18.02.2020 செவ்வாய்கிழமை** நிகழவுள்ளது. அன்று அவரை பக்தியுடன் நினைவு கூர்வோமாக.

தொகுப்பு **டி.சூரியநாராயணன்**

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

**ஸ்ரீ பாலசுப்பிரமணியன்** **9442094380**

**ஸ்ரீ நடராஜன்** **9443103404**



## பிரதக்ஷிணம்

"வேதபாரதி செய்திகள்" வாசகர்களை பிப்ரவரி 2020 முதல் சிறு உருவம் கொண்ட எறும்பு முதல் பெரிய உருவம் கொண்ட யானை வரை பலவித மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் என பல உயிரினங்கள் இறைவனை வழிபட்ட கோயில்களுக்கு **"பிரதக்ஷிணம்"** வைக்க அழைத்துச் செல்கிறோம். சென்ற மாதம் ஈ இறைவனை வழிபட்டு முக்தி அடைந்த "திரு ஈங்கோய் மலை" கோயிலுக்கு அழைத்துச் சென்றோம். இந்த மாதம் எறும்பு வழிபட்ட ஒரு ஸ்தலத்தில் பிரதிக்ஷிணம் வைக்கவிருக்கிறோம்.

### பிரதிக்ஷிணம் - 15
### "எறும்புகள்" வழிபட்ட ஸ்தலம்
### திருபெறும்பூர் எறும்பீஸ்வரர் கோயில்

**புராண வரலாறு :**



**"தாருகாசூரன்"** என்னும் அசுரன் தான் பெற்ற வரத்தினால் தேவர்களையும், முனிவர்களையும், துன்புறுத்தி வந்தான். அவன் இந்திரனையும் தோற்கடித்து விண்ணுலகைக் கைப்பற்றினான். தேவர்களும், தோல்வியுற்ற இந்திரனும் பிரம்மாவிடம் முறையிட்டார்கள். அவர் இந்திரனிடமும், தேவர்களிடமும் "நீங்கள் **தென்கயிலாயமான மணிக்கூடபுரத்து** பெருமானை

வழிபடுங்கள். அப்போது ஒரு புதல்வன் தோன்றுவான் அவன் அந்த அசுரனை அழிப்பான். அஞ்சாதீர்கள்'' என்று கூறினார். இந்திரனும் தேவர்களும் சிவனை வழிபட இந்த ஸ்தலத்திற்கு வந்தார்கள். தாங்கள் வழிபடுவதை அசுரன் அறிந்துவிடக்கூடாது என்று அவர்கள் **எறும்பு வடிவம்** எடுத்து சிவனை **“கரு நெய்தல்”** மலர்களால் அர்ச்சித்து வழிபட ஆரம்பித்தார்கள். அந்த மலர் எண்ணெய்ப் பசை நிறைந்ததாக இருந்ததால் சிவனின் உச்சியில் மலரை வைக்க பாணலிங்கத்தின் மீது ஏறியபோது அவர்களால் மேலே செல்ல முடியாமல் வழுக்கியது. அவர்கள் படும் துயரத்தைக் கண்ட சிவன் அவர்கள் எளிதாக ஏறி வர மண் புற்று போல தன் உருவத்தை மாற்றிக் கொண்டதோடு, இடதுபுறமாக சற்றே சாய்ந்தும் கொண்டார். அதன் பின் எறும்புகளான இந்திரனும் தேவர்களும் எளிதாக ஏறிச்சென்று மலர்களை வைத்து வழிபட்டார்கள். அவர்களுக்கு அருள்புரிந்த சிவன் தாருகாசுரனையும் அழித்தார். அதனால் **“எறும்பீஸ்வரர்”** என்ற பெயரையும் பெற்றார். இவருக்கு மதுவனேசுவரர், மாணிக்க நாதர், மணிகூடாசல தேஸ்வரர், திருவெறும்பியூர் ஆழ்வார் என்ற பெயர்களும் உண்டு. தாயார் பெயர் நறுங்குழல் நாயகி.

இந்த கோயில் ஒரு சிறிய குன்றின் மீது அமைந்துள்ளது. கல்லினால் வெட்டப்பட்டுள்ள சுமார் 125 படிகளின் மீது ஏறி இந்த கோயிலை அடையலாம். கருவரை முற்றும் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. நுழைவு வாயில் வடக்கு திசையில் உள்ளது. உள்ளே விநாயகர், முருகன் ஆகியோர் சிலைகளும் உள்ளன. மூலவர் எறும்பீஸ்வரர் கிழக்கு நோக்கி காணப்படுகிறார். லிங்கம் மண்புற்றாக இருப்பதால் நேரடியாக அபிஷேகம் செய்யாமல், தண்ணீர் புகாதவாறு ஒரு கவசம் பொருத்திய பின் அபிஷேகம் செய்கிறார்கள். தினமும் பூஜை செய்யும் போது கருவறையில் எறும்புகள் வரிசையாக ஊர்ந்து சென்று நைவேத்திய பொருட்களை எடுத்துக்கொள்ளுமாம். இதனை சிவனே எறும்பு வடிவில் வருவதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.

இக்கோயிலைக் குறித்து கூறும் 49 கல்வெட்டுகள் இங்கு உள்ளன. பரகேசரி வர்மன், ராஜகேசரி வர்மன், மூன்றாம் ராஜராஜசோழன், சுந்தரபாண்டியன் என பல்வேறு அரசர்கள் இக்கோயிலில் திருப்பணிகள் செய்துள்ளார்கள். கி.பி.1752 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுப் படையினருக்கும் போர் நிகழ்ந்த போது இம்மலை போர் வீரர்களின் தளமாகப் பயன்பட்டுள்ளது.



**திருநாவுக்கரசர்** பாடிய **‘‘திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம்”** முதலியன இறைவன் புகழை பாடுகின்றன. வைகாசியில் பிரம்மோற்சவம், ஐப்பசி பௌர்ணமியில் அன்னாபிஷேகம், மஹாசிவராத்திரியில் பிரதோஷ வழிபாடு, பௌர்ணமி கிரிவலம் என சிவாலய விழாக்கள் அனைத்தும் சிறப்பாக நடை பெற்று வருகின்றன. காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரை, மாலை 4.30 முதல் இரவு 8.00 மணிவரை நடை திறந்திருக்கும்.

திருச்சி - தஞ்சாவூர் சாலையில் திருச்சியிலிருந்து சுமார் 11 கி.மீ. தொலைவில் இந்த ஸ்தலம் உள்ளது. திருவெறும்பூர் ரயில் நிலையமும் உள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்திருத்தலத்திற்கு ஒரு முறை சென்று எறும்பீஸ்வரை வணங்கி வாழ்வில் ஏற்றம் பெறுவோமாக.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

# வேதபாரதி

## யுவன் யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

## ஆசிரியர்கள் பயிற்சி முகாம்

பதின்பருவ மாணவர், மாணவியருக்கு வாழ்வியல் பயிலரங்கம் நடத்திட ஆசிரியர் பயிற்சி முகாம் (இடம் : சென்னை), இரண்டு நாட்கள் (தேதி பின்னர் அறிவிக்கப்படும்) தங்குமிடம், உணவு ஏற்பாடு உண்டு. **குறிப்பு** : 25வயதிற்கு மேற்பட்ட 35 வயதிற்கு உட்பட்ட திருமணமான பெண்கள் கலந்து கொள்ளலாம். ஏதேனும் ஒரு கல்லூரி படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

## பயிற்சி இலவசம்

பயிற்சி பெற்றவுடன் வகுப்பு நடத்துபவர்களுக்கு போக்குவரத்து மற்றும் தகுந்த சனமானம் வழங்கப்படும்.

மேலும் தொடர்புக்கு

**போன்:9894736419, 9884031563**

# தர்மத்தின் குரல்

## பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

### 2.14-12. இன்னும் சில கேள்விகள்: (தொடர்ச்சி)

இந்த விருப்பம் ஸம்ஸ்காரம் ஆகும். கெட்ட ஸம்ஸ்காரம் இருந்தால், அவன் கெட்ட கர்மாக்களில் ஈடுபட்டிருந்தான் என்று பொருளாகிறது. எனவே, ஒருவன் தன் ஸம்ஸ்காரத்தைச் சீர் செய்ய முயல வேண்டும். ப்ராரப்தம் சரி செய்யப்பட முடிவதைப் போலவே, ஸமஸ்காரமும் சரி செய்யப்படக்கூடியதே.

13. "ப்ராயஸ்சித்தம் செய்து கொள்ள ஒருவனைத் தூண்டுவது எது? இந்தத் தூண்டுதலே, முற்பிறவிகளிலிருந்து தொடர்ந்து வருகிற ப்ராரப்தத்தின் விளைவா அல்லது ஸம்ஸ்காரத்தின் விளைவா அல்லது இரண்டினுடையவும் விளைவா? அப்படியானால், அதன் மீது நமக்கு கட்டுப்பாடு எதுவும் இராது. பின், சாஸ்திரம், ப்ராயஸ்சித்தங்களை விதித்திருப்பதன் பொருளென்ன?"

அது அவ்வாறு அல்ல. ஒருவனின் மனத்தில் தோன்றுகிற எண்ணங்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று நம்மைக் கடவுளை நோக்கி உயர்த்துவது. மற்றது, நம்மை உலக விஷயங்கள் மீது நாட்டம் ஏற்படுத்திப் பின்னுக்குத் தள்ளுவது. இந்த இருவகையான எண்ணங்களின் தொடர் ஓட்டமே, மனத்தின் இயல்பு. அதுவே ஸம்ஸ்காரமல்ல. மேற்சொன்ன இரண்டு திசைகளில், ஒரு திசையிலேயே எண்ணங்களை வலுவாகக் கட்டுப்படுத்துவது ஸம்ஸ்காரம். உலகப் பொருள்கள் மீதான ஸம்ஸ்காரம் ஏறக்குறைய எல்லோருக்கும் பொதுவானது. அதனால்தான், மக்கள் உலகப் பொருள்களைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருக்கிறார்கள். உலகப் பொருள்களைப் பற்றிச் சிந்திக்க முயற்சி தேவையில்லை. சிந்தனையை மற்ற திசையில் செலுத்த முயற்சி தேவை.

தொடரும்



# சுபாஷிதம் - 14

**"சுபாஷிதம்"** என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**கலஹாந்தனி ஹர்ம்யாணி குவாக்யானாம் ச சௌஹ்ருதம்**
**குராஜாந்தானி ராஷ்ட்ராணி குகர்மாந்தம் யசோ ந்ருணாம்**

பிணக்கு குடும்பத்தையும், கடுஞ்சொல் நட்பையும், மோசமான அரசு நாட்டையும், விதைத்தவனைத் தீவினையும் அழித்து விடும்.

**தானம் போகோ நாச: திஸ்த்ரோ கதயோ பவந்தி வித்தஸ்ய**
**யோ ந ததாதி ந புங்க்தே தஸ்ய த்ருதியா கதிர்பவதி**

ஆக்கும், காக்கும், அழியும் என்பவை செல்வத்தின் முக்குணங்கள். ஆக்கவோ, காக்கவோ பயன்படா செல்வம் அழியும்.

**அப்யாஸாத் தார்யதே வித்யா குலம் சீலேனே தார்யதே**
**குணேன ஞாயதே த்வார்ய: கோபோ நேத்ரேண கம்யதே**

பயிற்சியால் கல்வியையும், நடத்தையால் குலத்தையும், தர்மத்தால் குணத்தையும், கண்களால் சினத்தையும் கண்டுகொள்ளலாம்.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர
நிதிஉதவி செய்து வருபவர்
**ப்ரம்மஶ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

## "வேதாந்த பிரபோதம்" புத்தகம்

நம் பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.

தொடர்புக்கு : **9444445156 / 97909 20672**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 42

“இன்றைய ‘டிஜிட்டல் உலகம்’ எங்கள் பாதுகாப்பை மீறி பெண் குழந்தைகளை தாக்குகிறது’’ என்று பொள்ளாச்சி சம்பவத்திற்கு பிறகு ஒரு தாய் கூறினாள்.

“அடிக்காதீங்கண்ணா! உன்னை நம்பித்தானே வந்தேன்’’ எனும் அழுகுரல் ‘‘டிஜிட்டல்’’ மந்திரமாக ஒவ்வொரு தாய்க்குள்ளும் புகுந்து அவள் வாழ்வு முடியும்வரை ஆட்டிப் படைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

“நாங்கள் எங்கள் பெண் குழந்தைகளிடம் பேசுவதைவிட “டிஜிட்டல் உலகம்’’ தான் அவர்களிடம் அதிகம் பேசுகிறது. ஒரு பெண் குழந்தை பெற்றோர்களின் தொல்லை சிறிதுமின்றி இன்டர்நெட், ஆப்ஸ், ப்ரௌஸிங், இன்ஸ்டாகிராம் என்று தனி உலகில் வாழும் சூழ்நிலை’’ என்று மற்றொரு தாய் கூறினார்.

மூன்று வயதிலிருந்தே தக்க முறையில் வளர்த்து, மாறிக் கொண்டேயிருக்கும் அவர்கள் உலகிற்குள் சென்று, புதிது புதிதாக முளைக்கும் விஷயங்களை தானும் கற்று, அதைப்பற்றி அறிந்து, அதைப் புரிந்து கொண்டு பெண் குழந்தைகளை வளர்க்க இன்றைய தாய்மார்கள் படும் அவதிகளைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன்.

நான் என் மகளை வளர்க்கும் பொழுது இத்தனை அவதிகளைப் படவில்லை என்பது நிச்சயம். ஒரு தொலைபேசி மட்டும் இருந்தது. அது ஹாலில் இருந்தது. என் மகள் யாருடன் பேசுகிறாள் என்பதை என் தாய் கவனித்துக் கொண்டிருப்பார்.

நம் வாழ்க்கையை நாம் சற்றே திரும்பிப் பார்ப்போம். நாம் கூட அந்த வயதில் யாரோ ஒருவரின் மீது ஈர்ப்பு கொண்டிருந்தவர்கள் தானே. ஒரு சினிமா நடிகர், பாடகர்



அல்லது கிரிகெட் வீரர் என்று அந்த தலைமுறைக்கு எந்த அளவு வெளியுலகம் தெரிந்ததோ அந்தளவு ஈர்ப்பு மனதினுள் தோன்றியது உண்மை தானே. ஆனால் அதற்கு பெரிய களம், சுலபமாக சந்திக்கும் வரிகள் ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால் இன்று ஈர்ப்பு ஏற்பட்டவரிடம் தொடர்ந்து தொடர்பு கொள்ள பல சாதனங்கள் வழி வகுக்கின்றன.

மிக மிக சாதாரணமான ஒரு உணர்வான ஈர்ப்பு என்பது இச்சாதனங்களால் ஆழமான உணர்வாக மாற்றப்படுகிறது. பிரச்சினைகள் உருவாகின்றன.

அதனால் முதலில் நம்மிடம் பேசும் குழந்தைகளை ஆழமாக கவனித்து அவர்கள் பேசுவதை உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

கண்களும், உடல்மொழியும் நமக்கு உணர்த்தும் பல விஷயங்களை அவர்களின் பேச்சு உணர்த்தாது. அவர்களுக்கு உரிய சுதந்திரம், இடம் என்று பல வீடுகளில் பல விஷயங்கள் அளிக்கப்படுகின்றன.

ஆனால் அவர்களுடைய எண்ணங்கள், கருத்துக்கள் மற்றும் அவற்றின் பிரதிபலிப்பில் அடிப்படை நியாயம், தர்மம் உள்ளதா என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

‘நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், புரியவில்லையே’ என்று நீங்கள் கேட்பதை என் ‘மைன்ட் வாய்ஸ்’ தெரிவிக்கிறது!.

ஒரு மகள் / மகன் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களுடன் பழக வேண்டிய பள்ளிச் சூழ்நிலை, அதனால் ‘எம்மதமும் சம்மதம்’ ‘அனைத்து மக்களும் ஒன்றே’ என்று அவளுக்கு கற்றுத் தரப்படுகிறது. இதில் ஒரு தவறுமில்லை என்பதை மேலோட்டமாக பெற்றோர்கள் எண்ணுவார்கள்.

அறிவு சார்ந்த பெற்றோர்கள் உணர்ந்து புரிய வைக்க வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. அனைத்து மதங்களும் ஒரே மாதிரியாக மக்களை நடத்துவதில்லை. ஒவ்வொரு மதத்திற்கும் அதற்கென்றுரிய வழி உண்டு.

சீக்கிய மதத்தில் கத்தி வைத்துக் கொள்வது முக்கியம். தவறுகள் செய்தால் சீக்கியக் கோவிலில் உழவாரப்பணி செய்தால் பாவம் தீர்ந்துவிடும் என்கிறது.

எத்தகைய குற்றம் புரிந்தாலும் 'பாவ மன்னிப்பு' பெற்றால் செய்த பாவம் விலகி விடும் என்கிறது கிறிஸ்துவம்.

மதத்திற்காக இறந்தால் 'வீர சுவர்க்கம்' என்கிறது இஸ்லாம்.

இறந்தவர்களை பறவைகளுக்கு இறையாக்குவது தான் முக்கியம் என்கிறது பார்சியர்களின் மதமான Zorastranism.

ஆனால் ஹிந்து மதம் மட்டுமே இன்று பாவம் செய்தால் நாளை நீயோ அல்லது உன் சந்ததியோ அனுபவித்தே ஆக வேண்டும் என்கிறது.

இந்த முக்கியமான வித்தியாசத்தை உங்கள் குழந்தைக்கு உணர்த்துங்கள்.

தொடரும்...

## தெரிந்துகொள்வோம்

1. ஆதி சங்கரர் முதன் முதலில் சங்கர மடம் நிறுவிய இடம் எது?
2. வினாயகருக்கு மூஞ்சூறு வாகனமாக மாறிய அசுரன் யார்?
3. நாரதரின் தந்தை யார்?
4. பத்ராசலம் ராமதாசரின் பெயர் என்ன?
5. கந்தகுரு கவசம் பாடியவர் யார்?
6. உய்யக் கொண்டான் மலைமேல் வீற்றிருக்கும் இறைவனின் பெயர் என்ன?
7. அகோரம் என்றால் என்ன பொருள்?
8. மன்னன் சத்தியவிரதனுக்காக திருமால் எடுத்த அவதாரம் எது?
9. ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படும் நூல் எது?
10. பாம்பு இனத்தின் அரசன் யார்?

விடை 35ம் பக்கம்.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**



ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

**டி. சூரியநாராயணன்** பகுதி - 10



"சென்ற மாத இதழில் கீதையில் உள்ள 18 அத்தியாயங்களுக்கும் உள்ள தலைப்புகளின் பெயர்களையும், அந்த ஒவ்வொரு தலைப்பும் ''யோகம்'' என்று முடிவதையும் பார்த்தோம். ''யோகம்'' என்ற ஸமஸ்கிருத சொல்லுக்கு நேரடி பொருள் ''ஒன்றிணைத்தல்'' 'சேர்ப்பது'', சேர்ந்திருப்பது'' 'பொருந்துவது'' என்பதாகும். நாம் ஒரு விஷயத்தில் பொருந்தினால்தான்அதை அனுபவிக்க முடியும். நமது மனது எங்கே பொருந்த வேண்டுமோ அங்கே பொருந்த வேண்டும். உடம்பும், உயிரும் பொருந்துவது கிடையாது. காரணம் எங்கிருந்தோ வந்த உயிர் உடம்பில் புகுந்துக்கொண்டு பின் எப்போது இந்த உடம்பை விட்டு போகலாம் என்று காத்திருக்கிறது. ஆனால் உயிரும், உடலும் சேர்ந்தவுடன் உள்ளம் என்று ஒன்று உண்டாகிறது. ஆனால் உடம்போடும் உயிரோடும் அந்த உள்ளம் பொருந்துவதில்லை. ஆக உடம்பும், உயிரும், உள்ளமும் பரமாத்மாவுடன் பொருந்துவதில்லை. இவ்வாறு பொருந்தாமல் இருப்பதுதான் வாழ்க்கை. இந்த உடம்பு, உயிர், உள்ளம், பரமாத்மா ஆகிய எல்லாம் ஒரே நேர்க்கோட்டில் பொருந்துவதற்குத்தான் "யோகம்" என்று பெயர். பரம சத்தியத்தில் ஒரு ஜீவனை சேர்ப்பதற்கு உதவும் வழிகளை அத்யாத்ம சாஸ்த்திரங்களில் **"யோகம்"** என்று சொல்லியிருக்கிறது. அதாவது மனிதன் இறைவனை உணர்ந்து இறைவனும் ஒன்றிணைதல் என்று

கொள்ளலாம். பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றிணைதல். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும் போது சித்த சுத்தியை அடைந்து பரமாத்மாவோடு சேருவதற்கு அனுகூலமாக உள்ள எதுவெல்லாம் நமக்கு பரமாத்மாவை அடைய உதவுமோ அதுவெல்லாம் "யோகம்" தான். பகவானே கீதையில் இதைக் கூறுகிறார்

**அனன்யாஸ்சிந்தயந்தோ மாம் யே ஜனாः பர்யுபாஸதே/**

**தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்//**

*(கீதை 9-22)*

**பொருள் :** வேறு எதிலும் பற்று கொள்ளாமல் என்னையே சிந்தித்து, என்னையே உபாசித்திருப்பவர்கள் என்னிடமே ஈடுபட்டுள்ள பரமபக்தர்களில் யோகத்தை - பெறாததை பெறச் செய்வது - க்ஷேமங்களை - பெற்றதைக் காப்பாற்றுவது - ஆகிய செயல்களை நானே செய்கிறேன்.

கீதையில் 18 அத்தியாயங்களிலும் பகவானை அடைவதற்கான முறைகள் சொல்லப்படுவதால் எல்லா அத்தியாயங்களுக்கும் ''யோகம்'' என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

திரி ஷட்கம் = ஷட்கம் என்றால் ஆறு என்று பொருள். திரி ஷட்கம் என்றால் மூன்று ஆறு அதாவது கீதையில் உள்ள 18 அத்தியாயங்கள் மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது 6 அத்தியாயங்களுக்கு ஒரு ஷட்கம் முதல் ஆறு அத்தியாயங்களுக்கு **"கர்ம ஷட்கம்"** என்றும், இரண்டாவது 6 அத்தியாயங்களுக்கு **"பக்தி ஷட்கம்"** என்றும் கடைசி 6 அத்தியாயங்களுக்கு **''ஞான ஷட்கம்''** என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது முதல் ஆறு அத்தியாயங்கள் "ஜீவாத்மா" தத்துவமாகவும், இரண்டாவது ஆறு அத்தியாயங்கள் ''பரமாத்மா'' தத்துவமாகவும் கடைசி மூன்று ஆறு அத்தியாயங்கள் இவை இரண்டிற்கும் தொகுப்பாகவும் அமைந்துள்ளது.

தொடரும்....

**டி. சூரியநாராயணன்**



# வேதபாரதி - புதுவைக் கிளையின்
## "மார்கழி பஜனை"



வேதபாரதியின் அடிநாத சிந்தனையான இந்துக்களை ஒன்றிணைப்பதும் அவர்களை இறை பக்தி சிந்தனையின் பக்கம் திருப்புவதும், அதற்கான சேனாதிபதிகளான பிராமணர்களை தங்கள் மதம் மாறாமல், ஒழுக்கத்தை கட்டிக் காப்பதுமான தன்னலமற்ற தேசிய சிந்தனையோட்ட பணிகளுக்கு உரமூட்டும் வகையில் புதுவை வேதபாரதி கிளை துவக்கப்பட்ட சென்றாண்டு நகர நாம சங்கீர்த்தனம் துவங்கி அதை சிறப்பாக செயல்படுத்தியது.

இவ்வருடம் மார்கழி பஜனை, மார்கழி - 1, 17.12.2019 செவ்வாய் கிழமையன்று புதுச்சேரி காந்தி வீதி வரதராஜப் பெருமாள் கோவிலில் துவங்கி முக்கிய வீதிகள் வழியாக நடத்தப்பட்டது. மார்கழி, நகர நாம சங்கீர்த்தனத்திற்கென்றே தனியாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அதற்கான பொறுப்பை திரு.Excise பாலு அவர்களிடம் வழங்கப்பட்டது. அந்தக்குழுவில் VCRC பாலு அண்ணா, சீனுவாசன், சர்மா சீனுதாசன், கௌரிசங்கர், போஸ்டாபீஸ் அருணாசலம், வெங்கடாஜலபதி, பஜனை குழு சத்யா போன்றோர் மார்கழி மாதம் முழுதும் தவறாது கலந்துகொண்டு பஜனையை சிறப்பித்தனர்.

வேதபாரதியின் பஜனைக்குழு ஒவ்வொரு நாளும் ஒரு பகுதியாக தனது சங்கீர்த்தனம் செய்து இறைநாமம் போற்றியது. வாட்ஸ்-அப் குழுவில் மார்கழி பஜனை அறிவிப்பு செய்த ஒரே நாளில் நமது உறுப்பினர்கள் அவரவர் பகுதிக்கான நாட்களை பதிவு செய்து முடித்துவிட்டனர்.

இந்தாண்டு பஜனையின் போது நமது நோக்கம் நிறைவேறத் துவங்கியுள்ளது. பல பகுதியிலிருந்து எல்லா சமுதாய இந்துக்களும் அவர்கள் பகுதியில் நாம சங்கீர்த்தனம் செய்ய கேட்டுக்கொண்டனர். அதை ஏற்றுக் கொண்ட புதுவை

வேதபாரதி, புதுவை என்ற நகர எல்லையைத் தாண்டி மாநில எல்லையை நோக்கி தனது பணியை விரிவுபடுத்தியது.

சூரமங்கலம், பாகூர், கனகரெட்டிக்குளம் என்று பிற பகுதிகளுக்கும் சென்ற நமது குழுவை மற்ற சமுதாய மக்களும் பின்தொடர்ந்து நாம சங்கீர்த்தனம் செய்தது வேதபாரதியின் மீது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையை படம்பிடித்து காட்டியது. ஒரு கட்டத்தில் பஜனைக் குழுவை இரண்டாக பிரித்து ஒரே நாளில் இரண்டு பகுதிகளுக்கு அனுப்பியது புதுவை வேதபாரதி. இப்படியாக மார்கழி மாதம் முழுதும் இறை நாமங்களால் நிறைந்து களைகட்டியது புதுவை.

மார்கழி 29, 14.01.2020 செவ்வாய், போகிப் பண்டிகையன்று மார்கழி நிறைவு பஜனை கோலாகலமாக நடைபெற்றது. வரதராஜப் பெருமாள் கோவிலில் துவங்கிய பஜனை மற்றும் கலைக்குழு ஈஸ்வரன் கோவில் வீதி, அண்ணாசாலை, எஸ்.வி.பட்டேல் சாலை வழியாக காந்தி வீதி, ஈஸ்வரன் கோவிலில் முடிவுற்றது.


கடைசி நாள் புதுவை நகரமே இறை நாமங்களால் அதிர்ந்தது. மூன்று வாகனங்கள் ஒலிபெருக்கியை சுமந்து செல்ல ஒவ்வொரு வாகனத்தை தொடர்ந்தும், ஒவ்வொரு குழு பின்தொடர்ந்தது.


முதலாவதாக இருநூறு பள்ளிக் குழந்தைகள், திருப்பாவை மற்றும் திருவெம்பாவை வாசித்தப்படி சென்றனர், இரண்டாவதாக மேலும் இருநூறு குழந்தைகள் கோலாட்டம் மற்றும் கும்மியடித்து சென்றனர். இடையிடையே பரதமும் ஆடினர். கடைசியாக சம்பிரதாய பஜனைக் குழுவினர் நாம சங்கீர்த்தனம் செய்து வந்தனர். கிட்டத்தட்ட இந்த மொத்தக் குழுவும் சாலையின் ஒரு கிலோமீட்டரை ஆக்கிரமித்தப்படி தொடர்ந்தனர். ஆமாம், 600க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஒட்டுமொத்த புதுவையையே இந்த நிகழ்ச்சி வேதபாரதியின் பக்கம் திரும்பி பார்க்க வைத்துவிட்டது. நமது எந்த அழைப்பும் இல்லாமலே "You Tube" மற்றும் பல ஊடகங்களில் அடுத்தநாளே இச் செய்தி வெளிவந்தது.

ஆசிரியர்.








"No one ever becomes poor by giving charity; His soul becomes only richer and nobler..!"

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000–ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"

மனிதநேயமும், தர்ம சிந்தனையும் சங்கமிக்கும் இடம் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும், ஏழை புற்று நோயாளிகளின் புகலிடமான **நம்ம தர்மசாலா** என்றால் அது மிகையல்ல. ஸ்ரீ மாதா டிரஸ்ட் என்ற தாய்வீடு தங்களை அன்புடன் அரவணைத்து பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் ஏழை புற்று நோயாளிகள் வருகிறார்கள். ஏழை புற்றுநோயாளி களுக்காக தாங்கள் செய்யும் உதவி தவறாமல் அவர்களைச் சென்றடையும் என்கிற நல்ல எண்ணத்தில் நன்கொடை யாளர்கள் உதவி செய்கிறார்கள். இப்படி நம்பிக்கைக்கும், நல்லெண்ணத் திற்கும் பாலமாக இருபது வருஷங்களாக செயல்பட்டு வருவதை எண்ணி ஸ்ரீ மாதா டிரஸ்ட் தன்னிறைவு கொள்கிறது. **இம்மாபெரும் தர்மத்தேரின் வடத்தை மனிதநேயம் மிக்க நீங்கள்தான் தளராமல் பிடித்திருக் கிறீர்கள்.** உலகில் புற்றுநோயும், ஏழ்மையும் இருக்கும்வரை இப்பணி தடையின்றி தொடர்ந்திட நீங்கள் உதவிட வேண்டும்.

**"நாம் தேடிச் செல்லும் அன்பைக் காட்டிலும் நம்மைத்தேடி வரும் அன்பு மிகவும் மகத்தானது"** என்பதை ஒவ்வொரு முறையும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கும் நமது வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய திருமதி "ஸ்ரீ குருக்ருபா" **வேதா மாமி** மற்றும் அவரது ஆன்மீக வாரிசாக உருவாகி யிருக்கும் சேவை உள்ளம் கொண்ட அன்புத்தோழியர்கள் வழக்கம் போல் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் **நம்ம தர்மசாலா**வில் தங்கியிருக்கும் ஏழை




புற்றுநோயாளிகளுக்கு பொங்கல் பண்டிகைப் பரிசாக தரமான புத்தாடை களை பெரும் பொருட்செலவில் வாங்கி நன்கொடையாக நம்மிடம்



வழங்கினர். அவர்களது சார்பில் நம்ம தர்மசாலாவில் தங்கியிருக்கும் ஏழை புற்றுநோயாளிகள் மற்றும் அவர்களுடன் தங்கியிருக்கும் ஒரு உறவினருக் கும் அந்த புத்தாடைகள் வழங்கப்பட்டது. இவர்களைப் போன்றவர்கள்தான் **"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"** என்ற வள்ளுவரின் வாக்கிற்கு உரித்தானவர்கள். எளியோரை அரவணைக்கும் இந்த நல்ல உள்ளங்களை எண்ணி ஸ்ரீ மாதா டிரஸ்ட் பெருமிதம் கொள்கிறது. அவர் கள் நீடூழி நலமுடன் வாழ எங்களுடன் சேர்ந்து வாசகர்களா கிய நீங்களும் ப்ரார்த்தனை செய்யுங்களேன்...




நமது செயல் அறங்காவலர் திரு.ஆகாஷ்ராம் பொங்கல் புத்தாடைகளை ஏழை புற்றுநோயாளிகளுக்கு வழங்கி மகிழ்ந்தார்.


**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்...**

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "நம்ம தர்மசாலா"வின் செலவினை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.
**Account Name: SRI MATHA TRUST**
Bank Name: INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.: 163502000001090 | IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.



Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Next to Harini Skin & Laser Clinic] Adyar, Chennai-20. Tel: (044) 24420727 / 42661687
Mobile: 9444001065 / 9381020727 9003247857


Email: vkrishnamoorthy.smt@gmail.com Website: www.srimathatrust.org

Namma Dharmasala:
9, Yogi Garden, Sriram Nagar,
Adjacent to IIT Compound,
Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office:
'NATHA KAMALAM' 1-A,
Periyazhwar Street, Sundaram Colony,
East Tambaram, Chennai - 600 059.

## ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

***48625585 / 9840545585***




## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## உலகின் பொய்த்தன்மையை அறியாதிருத்தல்



ஒரு சிறுவன் தன் தாயிடம் வந்து, "எனக்கு ஒரு கதை கேட்க வேண்டுமென்று ஆசையாக உள்ளது. சொல்வாயா?" என்று கேட்டான் தாய் அவனுடைய ஆசைக்கு சம்மதித்து, பின்வரும் சுவாரஸ்யமான மற்றும் கற்பனையான கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

இல்லாத ஒரு நகரத்தில் அழகான மூன்று இளவரசர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் துணிவுடனும், நேர்மையுடனும் விளங்கினார்கள். அம்மூவருள் இருவர் பிறக்கவேயில்லை. மூன்றாவது இளவரசனோ தன் தாயின் கருப்பையையே அடையவில்லை. வாழ்வில் உன்னதமானதை அடைய வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் அவர்கள் மூவரும் ஒரு பயணத்தை மேற்கொண்டார்கள். நன்கு பழுத்த கனிகளைத் தாங்கிய மரங்கள், ஆகாயத்திலிருந்து தொங்கிக் கொண்டு இருந்ததை அவர்கள் வழியில் பார்த்தார்கள். விதவிதமான கனிந்த சுவையான பழங்களை அம்மரங்களிலிருந்து அவர்கள் பறித்து உண்டு மகிழ்ந்தார்கள்.

மேற்கொண்டு தங்கள் பயணத்தை தொடர்ந்த அவர்கள், சிற்றலைகளோடு விளங்கிய அழகான மூன்று நதிகளைக் கண்டார்கள். அவற்றுள் இரண்டு நதிகளில் ஒரு சொட்டு நீரும் இல்லை. மூன்றாவது நதி முழுவதும் வற்றிப் போயிருந்தது. வற்றிப் போன நதியில் இளவரசர்கள் மூவரும் குளித்து விளையாடினார்கள். பிறகு அந்நதி நீரை அவர்கள் ஆசைதீரப் பருகிவிட்டு ஒரு பெரிய நகரத்தைச் சென்றடைந்தார்கள். உருவாகவேயில்லாத அந்நகரத்தில் மக்கள் எல்லோரும் ஆடிப்பாடி பேசிக் களித்துக் கொண்டிருந்தார்கள்.

தொடரும்.

## ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கு
## பிள்ளையாரைக் குறித்து மஹா பெரியவாளின் விளக்கம்



**"வேதபாரதி செய்திகள்"** *புத்தகத்தில் ஜனவரி 2020 முதல் சிறிய குழந்தைகளுக்கான ''கேள்வி பதில்'' போட்டி ஆரம்பித்தோம் முதல் போட்டியில் முதல் கேள்வியில் குழந்தைகளிடம்* **சுக்லாம்பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம்..** *முழு ஸ்லோகத்தையும் எழுதி அதற்கான பொருளையும் எழுதுமாறு கேட்டிருந்தோம். பதில் அனுப்பிய ஒரு குழந்தை* **"இந்த ஸ்லோகம் விஷ்ணுவை குறித்தது. விஷ்ணுவை எல்லா இடையூறுகளும் நீங்குவதற்காக தியானிக்க வேண்டும்'' என்று எழுதியிருந்தார்.** *இந்த ஸ்லோகம் வினாயகரைத்தான் குறிக்கிறது என்பதற்கு ஸ்ரீமஹா பெரியவா அளித்த விளக்கத்தை அந்த குழந்தைக்கும் வாசகர்களுக்கும் அளிக்கிறோம்.*

ஆசிரியர்.

**ஸ்ரீ மஹா பெரியவாளின் விளக்கம் (தெய்வத்தின் குரலிலிருந்து)**

*''சுக்லாம்பரதரம்'' ச்லோகம் எதற்கும் ஆரம்பத்தில் சொல்கிறோமே, அதிலே ஒரு வேடிக்கை! என்னவென்றால், அதில் பிள்ளையாருடைய பெயர் எதுவுமே வரவில்லை! கணபதி, கணேசர், விநாயகர், விக்நேஸ்வரர் என்ற மாதிரி அவருக்கே ஏற்பட்ட பெயரோ பெற்றோரைவைத்து ஏற்பட்ட சிவாத்மஜன், கௌரீஸுதன் என்ற மாதிரிப் பெயரோ, அவருடைய வாஹனம், ஆயுதம், இஷ்டமான வஸ்து*



*ஆகியவைகளை வைத்து ஏற்பட்ட மூஷிக வாஹனர், பாசஹஸ்தர், மோதக ப்ரியர் முதலான ஏதாவதொரு பெயரோ, அவரது ரூப லக்ஷணங்களைக் குறிக்கிற பெயர்களான கஜமுகர், ஏகதந்தர், லம்போதரர் (தொங்கும் தொந்திக்காரர்) முதலானதுகளில் ஏதாவதொன்றோ, அல்லது அவரது லீலைகளை வைத்து ஏற்பட்ட ஏராளமான பெயர்களில் எது ஒன்றுமோ 'சுக்லாம் பரதர' ச்லோகத்தில் வரவில்லை. சொல்லிப்பாருங்கள்.*

**சுக்லாம்பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம்**
**ப்ரஸந்த வதநம் த்யோயேத் ஸர்வ விக்நோபசாந்சயே**

**"சுக்லாம்பரதர'':** *வெள்ளை வஸ்திரம் கட்டிக் கொண்டிருப்பவர். ஸரஸ்வதியும், ஈச்வரனும் கூடத்தான் வெள்ளை கட்டிக்கொள்வார்கள். வித்யாஸமாக மஞ்சள், சிவப்பு கட்டிக்கொள்கிற ஸ்வாமிகளைப் பீதாம்பரதாரி, ரக்தாம்பரதாரி என்றெல்லாம் சொன்னால் அது அவர்களைத்தான் ஸ்பெஷலாகக் குறிக்கிறது என்பதுபோல, 'சுக்லாம்பரதரர்'' என்பது பிள்ளையாரை மாத்திரம் குறிப்பிட்டுவிடவில்லை.*

*அடுத்ததாக, ''விஷ்ணு'' இதற்காகத்தான் நான் இந்த ச்லோகத்தைச் சொல்லவந்தேன். மாமா பேரையே மருமகனுக்குச் சொல்லியிருக்கிறது. அத்தனை அந்நியோந்நியம்! 'விஷ்ணு' என்றால் எல்லா இடத்திலேயும் பரவியிருப்பவர். ஸர்வ வ்யாபி என்று அர்த்தம். பிள்ளையார் எங்கேயும் இருக்கிறாரென்பதால் 'விஷ்ணு' என்று சொல்லியிருந்தாலும்; அந்த வார்த்தையைக் கேட்டவுடனேயே நமக்கு அவருடைய மாமா நினைவுதானே வருகிறது?*

**"சசிவர்ண'' :** *நிலா மாதிரி நிறமுடையவர். ஈச்வரனும், ஸரஸ்வதியும் கூடத்தான் அப்படிப் பால்நிலா மாதிரி இருப்பவர்கள்.*

**"சதுர்புஜ'' :** *நாலு கை உள்ளவர். அநேகமாக எல்லா ஸ்வாமிக்குமே நாலு கைதானிருக்கிறது. அதனால் இதிலும் இவருக்கென்று ஸ்பெஷலாக அடையாளம் கிடைத்துவிடவில்லை.*

**"ப்ரஸந்ந வதந'' :** *நல்ல மலர்ந்த முகமுள்ளவர் பின்னே, எந்த ஸ்வாமியாவது அழுமூஞ்சியாக இருக்குமா என்ன? காளி, வீரபத்ரர், நரஸிம்ஹ மூர்த்தி மாதிரி உக்ரமாக இருக்கப்பட்ட*

சில ஸ்வாமிகளைத் தவிர மற்ற எல்லா ஸ்வாமியும் பக்தர்களிடம் அநுக்ரஹத்தோடு ஆனந்தம் நிறைந்த முகத்தோடு இருப்பதைதான் இத்தனை ஆயிரம் விக்ரஹங்களிலும் பார்க்கிறோம். அவர்களையெல்லாம்விட இன்னம் ஆனந்தம் சொட்டிக் கொண்டிருக்கும்படியாகப் பரந்த, விசாலமான ஆனை முகத்தோடு இவர் இருக்கிறார் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இப்படி சுக்லாம்பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜ, ப்ரஸந்த வதநம் என்று வருகின்ற ஐந்து வார்த்தைகளில் எதுவுமே பிள்ளையாரொருவரை மட்டும்தான் குறிக்கிறது என்று சொல்வதற்கு இடமில்லாமலிருக்கிறது.

(இந்த ஐந்து வார்த்தைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குட்டாக ஐந்து தரம் நெற்றிப் பொட்டில் குட்டிக்கொள்ள வேண்டும்)

அப்புறம், 'த்யாயேத்' என்பதற்கு 'த்யானிக்க வேண்டும்' என்று அர்த்தம்.

எதற்காக த்யானிக்க வேண்டும்? "ஸர்வ விக்ந உப சாந்தயே" எல்லா விக்னங்களும், தடைகளும் இடையூறுகளும் அடங்கி மறைந்து போவதற்காகவே, இங்கே தான், ஒரு நாமாவாகச் சொல்லாவிட்டாலும், பிள்ளையாருக்கென்றே ஏற்பட்ட விசேஷ லக்ஷணம் தெரிகிறது. எடுத்த கார்யம் விக்னமில்லாமல் நடக்க வேண்டுமென்றால் அதற்கென்று பிரார்த்திக்கப்பட்டவேண்டிய ஸ்வாமி பிள்ளையார்தான். அதனால்தான் எந்தக் கார்யத்தையும் ஆரம்பிக்கிறபோதே அவருக்குப் பூஜை பண்ணிவிடுவது; இந்த ஒரு ச்லோகமாவது சொல்லி நெற்றியில் குட்டிக் கொண்டுவிடுவது.

ச்லோகம் சொல்லிக்கொள்ளக்கூடிய வயஸுக்கு முந்தியே ஒரு சின்னக் குழந்தையிடம் கூட, 'அப்பா! பிள்ளையாரை நினைச்சுக்கோ! அப்போதான் எந்தக் கஷ்டமும் வராமலிருக்கும்' என்று சொல்லிக் கொடுத்துவிடுவார்கள். அதனால், ச்லோகம் கற்றுக் கொள்கிற வயஸு வந்தபோது, இப்படி 'ஸர்வ விக்நோபசாந்தயே' என்று சொல்லிக் கொடுத்துவிட்டாலே போதும், 'இடைஞ்சல் வராமலிருப்பதற்காக இந்த ஸ்வாமிக்கு ஸ்தோத்திரம் சொல்லணுமா? அப்படியானால் அவர் பிள்ளையாராகத்தானிருப்பார்" என்று அந்தக் குழந்தைகூடப் புரிந்துகொண்டுவிடும்.

ஆசிரியர்.




# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## பழமொழிகளும் அவற்றுக்குண்டான உண்மையான அர்த்தங்களும்

பழமொழி என்பது ஒரு செயலுக்கு அல்லது செய்கைக்கு விளக்கம் தர சொல்லப்பட்டது. அந்தக்காலத்தில் சொல்லப்பட்ட பழமொழிக்குண்டான உண்மையான அர்த்தங்கள் நாளடைவில் மருவி தற்போது ஏதோ அர்த்தங்கள் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பழமொழிகளின் சரியான விளக்கங்கள் இந்தப்பகுதியில் தொடர்ந்து அளிக்கப்படும்.

**1. ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்.**

**தற்போது கூறும் பொருள் :** ஐந்து பெண்களை பெற்றெடுத்தால், அவர்களுக்கு செய்ய திருமணம், சீர் போன்றவற்றை செய்து முடிப்பதற்குள் அரசனும் ஆண்டி ஆகிவிடுவான்.

**உண்மையான பொருள்**

கீழ்க்கண்ட ஐந்தும் கிடைத்தால் அரசனும் ஆண்டி ஆவான். 1. ஆடம்பரமாய் வாழும் தாய் 2. பொறுப்பு இல்லாமல் போகும் தகப்பன் 3. ஒழுக்கம் தவறும் மனைவி 4. துரோகம் செய்யும் உடன் பிறப்பு 5. பிடிவாதம் பிடிக்கும் பிள்ளை. இந்த ஐந்தும் கொண்ட எந்தக் குடும்பமும் முன்னுக்கு வராது என்பதே பொருள்.

**2. புண்பட்ட மனதை புகை விட்டு ஆத்து.**

**தற்போது கூறும் பொருள் :** மனது புண்பட்டிருக்கும் போது புகை விட்டு (புகையிலை) ஆற்றி கொள்ள வேண்டும்.

**உண்மையான பொருள்**

புண்பட்ட மனதை புக விட்டு ஆற்று.

மனது புண்பட்டிருக்கும் போது, தமக்கு பிடித்த வேறொரு செயலில் மனதை புகவிட்டு ஆற்றிக் கொள்ள வேண்டும் என்பதே சரி.

**3. சேலை கட்டிய பெண்ணை நம்பாதே!**

**தற்போது கூறும் பொருள் :** சேலை கட்டும் பெண்களை நம்பாதே!

**உண்மையான பொருள்**

சேல் அகட்டிய பெண்ணை நம்பாதே!.

சேல் என்பது கண்ணை குறிக்கும். கணவன் உடனிருக்கும் போது, (சேல்) கண்ணை அகட்டி வேறொருவனை பார்க்கும் பெண்ணை நம்ப கூடாது.

**- தொகுப்பு ஆதித்யன்**

**நிர்வாக காரணங்களால் பிப்ரவரி மாதம் குழந்தைகளுக்கான போட்டி தள்ளி வைக்கப்பட்டுள்ளது.**
**- ஆசிரியர்.**



## வியக்க வைக்கும் எண்கள்

கணிதம் என்பது ஒரு ஆழமான கடல். இந்த கணிதத்தின் அடிப்படை அம்சமே ஒன்றிலிருந்து ஒன்பது வரையுள்ள எண்கள்தான். எண்கள் வரிசையில் ஒன்று முதல் 100 வரை விரிவாக பார்ப்போம்.

### எண் 4-ன் சிறப்பு

1. வேதங்கள் நான்கு - (1) ருக் வேதம், (2) யஜுர் வேதம், (3). சாம வேதம் (4) அதர்வண வேதம்.
2. வேத சாஸ்திரங்கள் : (1) அர்த்த சாஸ்திரம் (2) கர்ம சாஸ்திரம் (3) காம சாஸ்திரம் (4) மோக்ஷ சாஸ்திரம்.
3. பூஜைகள் : (1) பூர்வாங்க பூஜை, (2) ப்ரதான பூஜை, (3) உத்தராங்க பூஜை (4) புனர் பூஜை.
4. சதுர் முக்தி ஸ்தலங்கள் :
   1. திருவாரூர் - பிறக்க முக்தி
   2. காசி - இறக்க முக்தி
   3. சிதம்பரம் - தரிசிக்க முக்தி
   4. திருவண்ணாமலை - நினைக்க முக்தி
5. நால்வகை கவிகள் :
   1. ஆசு கவி - விரைவாக இயற்றப்படும் கவிதை
   2. வித்தார கவி - விரிவாக விளக்கமாக இயற்றப்படும் கவிதை
   3. மதுர கவி - இனிமையான குரலில் பாடக்கூடிய கவிதை
   4. சித்ர கவி - ஓவியங்களைக் கொண்டு புனையப்படும் கவிதை
6. இறைவனை வணங்கி அவனை அடையும் வழிகள் :
   1. சரியை - கோயில்களில் வழிபாடும், திருப்பணியும் செய்தல்
   2. கிரியை - இறைவன் திருவுருத்தை முழு மனதுடன் தியானித்தல்.
   3. யோகம் - இறைவனை மனத்தில் நிறுத்தி தவம் செய்தல்
   4. ஞானம் - நேர்மையையும், ஒழுக்கத்தையும் கற்று மானசீமாக வழிபாடு மூலம் ஞானம் பெற்று இறைவனை அடைதல்

இன்னும் ஏராளம், ஏராளம்

தொகுப்பு : **ஆதித்யன்**

ஹரி ஓம்.
பெரியவா திருவடிகள் சரணம்

# சந்த்யா வந்தன போட்டி 2019

சென்ற25.12.2019 அன்று நெமிலிச்சேரி சிவா வேத பாடசாலையில் அந்தணச் சிறுவர்களுக்கான சந்த்தியாவந்தனப் போட்டி நடைபெற்றது. ஆண் / பெண் இருபாலரும் 85 குழந்தைகள் கலந்துகொண்டார்கள். அத்துடன் நம் சமூகப் பெண் குழந்தைகளுக்கான நமது பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளான பல்லாங்குழி, பாண்டி, ஸ்கிப்பிங், பரமபதம் மற்றும் பேச்சுப் போட்டி போன்றவை நடத்தப்பட்டது.



சந்த்தியாவந்தனப் போட்டிக்கான வினாத்தாள்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு விடையளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. பிறகு வாய்வழிக் கேள்விகள் கேட்கப்பட்டது. பாடசாலை ஆசிரியர்கள் நடுவர்களாக இருந்து பரிசுக்கு உரியவர்களை தேர்ந்து எடுத்தார்கள். வேத பாரதியின் அடுத்த தலைமுறைபெண் குழந்தைகள் குமாரிகள் சுஷ்மிதா, மதுரிமா, ஐஷ்வர்யா, ஆர்த்தி, ஹேமா, பூர்வஜா, சுபஸ்ரீ மற்றும் நாராயணி ஆகியோர் கும்பகோணம் திருமதி. வித்யா ராமகிருஷ்ணனின் வழிகாட்டுதல் படி பெண் குழந்தைகளின் விளையாட்டுப் போட்டிகளை நடத்தினர். மேலும் பெண்குழந்தைகளுக்கு நட்புக்கும் உறவுக்குமான புரிதல் என்ன? குடும்ப பெருமை முடிவெடுக்கும் தருணத்தில் யார் துணை? என்ற தலைப்புகளில் பேச்சுப் போட்டிகளும் நடைபெற்றன. மேற்கண்ட போட்டிகளை நடுவர்களாக இருந்து ஸ்ரீமதி வித்யா, ஸ்ரீமதிப்ரியா, ஸ்ரீமதி ரமா கிருஷ்ணமூர்த்தி நடத்திக் கொடுத்தார்கள். அனைவருக்கும் மாலை சிற்றுண்டி மற்றும் தேநீர் வேத பாடசாலையில் வழங்கப்பட்டது. திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் அனைத்து நிகழ்ச்சிகளையும் நேர்த்தியாக நடத்தினார். திரு.வெங்கட்ராமன் அவர்கள் பெற்றோர்கள் இடையே சிறு உரையாற்றினார். பெற்றோர்கள் வேத பாரதியின் பணிகள் பற்றி கேட்டு தெரிந்து கொண்டனர். ஒரு பெண்மணி ஏழ்மையில் உள்ள நம் சமூகத்தார் சிலருக்கு அந்திம காரிய சமயத்தில் உதவ முடியுமா என்று வினவினார். அவ்வாறு உள்ளவர்களுக்கு அந்த தேவை ஏற்பட்டாலோ அல்லது வேறு உதவி ஏதேனும் இருந்தாலும் வேதபாரதியை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். தங்களால் இயன்றஉதவியை செய்வோம் என்றும் ஆனால் நம் சமூக மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு கலப்புத் திருமண உதவி என்று கேட்டால் அதை நிறைவேற்ற இயலாது என தெளிவு பட தெரிவிக்கப்பட்டது.



பரிசு வழங்கும் விழாவிற்கு ஸ்ரீமான் சிவா சாஸ்திரிகள் தலைமை தாங்கி சிற்றுரை ஆற்றினார். அவர் சந்த்யாவந்தன கர்மாவின் அவசியத்தை வலியுறுத்தி மாணாக்கர்கள் தினமும் பள்ளி செல்லும் முன் மாத்யாந்நிஹம் கூட செய்துவிட்டு பள்ளி செல்லும்படியும், மேலும் தாங்கள் படித்து முடித்து நல்ல நிலையை அடையும் போது நம் சமூகம் பயன்பெற தன்னால் முடிந்ததை செய்ய வேண்டும் எனவும் மாணாக்கர்களை கேட்டுக்கொண்டார்.

பெற்றோர் சிலர் சந்த்தியாவந்தனப் போட்டிக்கான வினாக்களுக்கு விடைகள் அனைவருக்கும் தெரிவிக்க கேட்டுக் கொண்டனர். நேரமின்மை காரணமாக அனைத்து கேள்விகளுக்கான விடைகளை அவரவர்களுக்கு அனுப்பி வைக்க ஆவண செய்யப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது.

-ஆசிரியர்

**14ஆம் பக்கத்து கேள்விகளுக்கான விடைகள்**

*1. சிருங்கேரி 2. மூஷிகன் 3. பிரம்மா 4. கோபண்ணா*
*5. சந்தானந்த சுவாமி 6. உஜ்ஜீநாதர் 7. அழகான முகம்*
*8. மச்சாவதாரம் (மீன்) 9. மஹாபாரதம் 10. தட்க்ஷன்*

தொகுப்பு : **பரிதி**

# குழந்தைகள் பகுதி

## போட்டி எண் 1 (ஜனவரி 2020)

**2020 ஜனவரி மாதம் முதல் குழந்தைகளுக்காக நடத்திய போட்டியில் ரூ.1000/- பரிசு வென்ற அதிர்ஷ்டசாலி**

*"வேதபாரதி செய்திகள்" புத்தகத்தில் 2020 ஜனவரி மாதம் முதல், 8 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக புதியதாக கேள்வி பதில் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி ஜனவரி 2020 மாத போட்டியில் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளும் கேட்கப்பட்ட ஐந்து கேள்விகளுக்கும் சரியான பதிலை அனுப்பியிருந்தார்கள். போட்டியின் விதி 4-ன் படி குலுக்கல் முறையில் தேர்வு பெற்று ரொக்க பணம் ரூ.1000/- ம் ஒரு நல்ல புத்தகமும் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி*



**R.ஹர்சினி**

*த/பெ.வி.இராமகிருஷ்ணன்*
*காட்டுமன்னார்குடி, கடலூர் மாவட்டம்*
*வயது 12, 7-ம் வகுப்பு*

*இவருக்கு சன்மானம் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) இவருடைய தந்தையின் பெயரில், கொடுத்துள்ள வீட்டு விலாசத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பப்பட்டுவிட்டது. புத்தகம் கூரியரில் இவருடைய பெயருக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இவை கிடைத்தமைக்கு விடை அனுப்பிய விலாசத்திற்கே பதில் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*போட்டியில் கலந்து கொண்ட மற்ற குழந்தைகளுக்கு புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.*

*ஆசிரியர்.*



ஆரோக்கியமான வாழ்க்கைக்கு
பசுமை
ஆர்கானிக் & நேச்சுரல்ஸ்
நெ. 5B/4, 7வது குறுக்கு தெரு, தண்டீஸ்வரம், வேளச்சேரி, சென்னை – 600 042. (தினத்தந்தி அலுவலகம் அருகில்)
044–42325018
8667809923

**இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்கள்**

**வெள்ளிக்கிழமைகளில் கிடைக்கும்**

**நாட்டு பசும்பால், பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானியங்கள், மரச்செக்கு எண்ணெய், தேன் இரசாயணமற்ற அழகு சாதன பொருட்கள் மூலிகை பொடிகள், மூலிகை டீ மற்றும் எண்ணற்ற இயற்கை பொருட்கள் இங்கு கிடைக்கும்.**

# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

## அன்றாடம் அக்குபிரஷர்

உடலில் ஏற்படக்கூடிய எந்த நோய்களையும் தானே குணப்படுத்திக் கொள்கின்ற சக்தி இயற்கையாகவே நம் உடலுக்கு இருக்கின்றது.

நோய்களை குணப்படுத்துவதில் அக்குபிரஷர் முறை மூலம் உடல் உறுப்புகளையும், அவற்றின் இயக்கத்திற்கு காரணமான நாளமில்லா சுரப்பிகளையும் நல்ல நிலையில் நம்மால் வைத்திருக்க முடியும் அக்குபிரஷர் முறை நோய்களை குணப்படுத்துகிற முறை மட்டுமல்ல, நோய்கள் அனுகாமல் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் முறையாகும்.

அக்குபிரஷர் முறை மிக எளிமையானது. இதற்கு யாருடைய உதவியும் தேவையில்லை. நம்முடைய உடல் உபாதைகளை நாமே நன்கு உணர்ந்து அது தொடர்பான எந்த புள்ளியில் அழுத்தம் கொடுக்கவேண்டும் என அறிந்து இந்த முறையை வெற்றிகரமாகக் கையாள வேண்டும்.

இந்த அக்குபிரஷர் முறைகளை உங்களுக்கு நீங்களே செய்துகொள்வதோடு உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகிய அனைவருடைய உபாதைகள், உடல்நலக்குறைவுகள் ஆகியவற்றை நீங்களே நீக்கிவிட முடியும்.

அன்றாட உங்கள் களைப்பை நீக்கி கொள்ளும் விதத்தில், சக்தி கிடைக்கக்கூடிய மையப் பகுதிக்கு அழுத்தம் கொடுத்து, சக்தியைப் பெற்று களைப்பிலிருந்து விடுபடலாம்.குறிப்பிட்ட நேரங்களில் ஓய்வு கிடைக்கின்ற போது, உங்களுக்குத் தோன்றுகிற நேரங்களில் அக்குபிரஷர் முறையை கையாண்டு நீங்கள் பயனடைய முடியும்.

**Dr.செந்தில்குமார்**
Acupuncture Specialist, Yoga & Varma Healer

# திருப்பாவை - திருவெம்பாவை போட்டி 2020

நமஸ்காரம், ஸ்ரீ விகாரி வருடம் மார்கழி 20ம் நாள் (05.01.2020) ஞாயிற்றுக்கிழமை மேலும் ஓர் சிறப்பினை வேத பாரதிக்கு நல்கியது. வேத பாரதி மற்றும் ஸ்ரீ சங்கரா கல்வி அறக்கட்டளையினர் இணைந்து பள்ளிக்கூட குழந்தைகளுக்கான திருப்பாவை திருவெம்பாவை மற்றும் திருப்பள்ளியெழுச்சி பாசுரங்களை ஒப்புவித்தல் மற்றும் இசைப்போட்டிகளாக, கிழக்குத்தாம்பரம் ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளி வளாகத்தில் நடத்தி தங்கள் தனித்துவத்தை நிலைநாட்டினர். இவ்வருடத்தின் பாவைவிழாவின் முக்கியத்துவமே, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கும் தனியார் பள்ளி மாணாக்கர்கள் போலவே தனித்தனியே போட்டிகளை நடத்தி வெற்றியாளர்களுக்கு பரிசளித்ததுதான் போட்டிகளில் பங்கேற்க மாணவ மாணவிகளை பரிந்துரைத்த மொத்த பள்ளிகள் கலந்து கொண்டு போட்டியாளர்கள் சென்றவருடங்களைப் போல் இவ்வருடமும் அதிகமான பரிசுகளை வென்ற பள்ளிகளாக தனியார் பிரிவில் மண்ணிவாக்கம் ஸ்ரீ நடேசன் வித்யாசாலா மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளியும் அரசுப்பள்ளிகளில் ஓட்டேரி விரிவு பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளியும் நினைவுப்பரிசு கேடயங்களை பெற்றன.






மேற்கூறிய அரசுப்பள்ளியிலிருந்து 9 போட்டியாளர்கள் பங்கெடுத்தனர். பங்கெடுத்த அனைவரும் பரிசு பெற்றதும் அப்பள்ளி 6 ஆசிரியைகள் நடுவர்களாக பணியாற்றியதும் மிக முக்கியமானது. இவ்விழாவின் மற்றொரு நிகழ்வாக, தமிழ்நாடு விஸ்வ ஹிந்து பரிஷத்தின் மூத்த தலைவரும் ஹிந்து சமுதாயத்திற்காக பல நூல்களை படைத்து வரும் ஸ்ரீ ஆர்.பி.வி.எஸ் மணியன் ஜி அவர்களின் "திருக்குறள் ஒரு வைதீக ஹிந்து சமய நூலே" என்றபுத்தக வெளியீடும் மற்றும் வேதபாரதி உறுப்பினரும், "யுவஸ்ரீ" நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்த உதவும் ஸ்ரீ மதி டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன் அவர்களின் "இலங்கையில் இராமாயணத் தேடல்கள்"என்றபுத்தகத்தின் மறு வெளியீடு தென் சென்னை புறநகர் பகுதி வாசகர்களுக்காகவும் நடந்தேறியது.

பாவை விழா 2020 நிகழ்ச்சிக்கு மாணாக்கர்கள் அவர்தம் பெற்றோர், ஆசிரியைகள் மற்றும் நடுவர்கள் எனப்பலருமாக சுமார் 1200 நபர்கள் வந்திருந்தனர். அனைவருக்கும் மதிய உணவாக நங்கநல்லூர் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்வாமி திருக்கோயில் ப்ரஸாதமும், நிகழ்ச்சிகளின் இடைவேளையில் வந்திருந்த அனைவருக்கும் தேனீரும் மாணவ மாணவியருக்கு பாலும் பிஸ்கெட்டும் வினியோகிக்கப்பட்டது.

போட்டிகளில் பங்கேற்றமாணவரனைவருக்கும் அடையாள எண் அட்டை வழங்கப்பட்டு அவர்களை எல்.கே.ஜி முதல் 12-ம் வகுப்பு வரை இரண்டிரண்டு பிரிவுகளாக அறைக்கு 30-35 பேர் வரை அமர்த்தி, இரண்டிரண்டு நடுவர்களால் காலை 9.30 மணி முதல் நண்பகல் 11.15 மணி வரை, அவர்களின் பாசுரங்கள் ஒப்புவித்தல் மற்றும் பாடும் திறமைகள் ஆராயப்பட்டன. ஒவ்வொரு அறையிலிருந்து போட்டியாளர்களின் திறமை முதல், இரண்டு, மூன்று பரிசு நிலைகளிலும் 2 ஆறுதல் பரிசு பெறுபவர்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டது. பரிசுப்பொருட்கள், மாணவரின் எதிர்கால முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு, புஸ்தகங்களாக ஸ்ரீ சங்கரா கல்வி அறக்கட்டளையினர் சார்பில் வழங்கப்பட்டது.

இவ்வாறு வெற்றிகரமாக நடந்து முடிந்த பாவை விழா 2020, சுமார் 2 மாதங்களுக்கு முன்பாக திட்டமிடப்பட்டு பல

பள்ளிகளை நேரில் தொடர்பு கொண்டு அவர்கள் பங்களிப்பினை மின்னஞ்சல் வழியாக உறுதி செய்யப்பட்டது. மனப்பாடப்பகுதிகள் போட்டியாளர்களுக்கு அவரவர் பள்ளிகள் மூலமாகவே விநியோகிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் செயல்பாட்டுத் திட்டங்கள் பாவை விழாக் குழுவினரால் 3 முறைகூடுதலில் விவாதிக்கப்பட்டது. பரிசு புஸ்தகங்கள் தவிர ஏனைய பிறசெலவினங்களுக்கான நிதி மேலாண்மை, போன்ற களப்பணிகள், மின்னஞ்சல் வழியாக பெறபெற்றபோட்டியாளர்களின் பெயர் பட்டியல்களை போட்டி வாரியாக ஒருங்கிணைக்கும் கணிணி சம்மந்தப்பட்ட அலுவலகப்பணிகள், பரிசுப்பொருட்களை வெற்றியாளர்களுக்காக வைக்கப்படுதல், போட்டியாளர்களை வகுப்பு வாரியாக பிரித்து உரிய அறைகளுக்கு அனுப்பி வைத்தல், சான்றிதழ்களில் போட்டிகளில் பங்கேற்றவர் பெயர்களை எழுதி தயார்படுத்துதல் நிகழ்ச்சிகள் முடிவுற்றவுடன் பள்ளி வளாகத்தில் சிதறி கிடக்கும் உணவுக்கழிவுகள் மற்ற தேவையற்ற பொருட்களை துப்புரவு செய்தல் போன்ற அத்தியாவசிய அடிப்படை வேலைகளை, வேதபாரதி உறுப்பினர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் மனமுவந்து செய்து விழா நிகழ்வினை சிறப்பானதாக்கினர்



**பாவை விழா 2020 குழுவினர்**



# நல்லறமாய் ஒரு இல்லறம்



அன்புக்கும், ஆன்மீகத்துக்கும், மகான்களுக்கும், குருமார்களுக்கும், உயர்ந்த மனிதர்களுக்கும், சகல ஜீவராசிகளுக்கும், ஊருக்கும், உறவுகளுக்கும், ஐஸ்க்ரீமாக உருகும் வெள்ளந்தி மனம் கொண்ட விந்தை மனிதர் ஒருவரை ராமேஸ்வரத்தில் அவருடைய இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சந்திப்புக்கு முன்னரே நொச்சிவாடி எனும் இடத்தில் அவருக்கு சொந்தமான ''அமிர்தஸ்ரீ'' ஐஸ்க்ரீம் தயாரிப்பு கூடத்திற்குள் நான் என் நண்பர்களுடன் நுழைந்தேன். அன்பைக் குழைத்து, ஐஸ்க்ரீம்களால் எங்களைத் திணறச் செய்தார் திரு.சுடலை எனும் ஐஸ்க்ரீம் மனிதர்.

'நல்லறமாய் ஒரு இல்லறம்' என்று தலைப்பிட்டு ஒரு புத்தகம் எழுதும் அளவுக்கு வாழ்க்கையில் சத்தியம், நியாயம், தர்மம் என்பதை தீவிரமான கொள்கைகளாகக் கொண்டு, வாழ்ந்து கொண்டிருக்கிறார். இத்தகைய ஒரு மனிதரின் விருந்தோம்பல், நமது மகான்களாலும் தட்டிச்செல்ல முடியவில்லை என்பதற்கு உதாரணமாக, காஞ்சி மகான் ஸ்ரீ ஜெயேந்திர பெரியவா, மாதா அமிர்தானந்தமயி, வாழும்கலை குருஜி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஆகியோர், அவருடைய சிறிய, சாதாரண இல்லத்திற்கே விஜயம் செய்தது பற்றி சுடலை அவர்கள் விவரித்த போது வியப்பின் எல்லைக்கே சென்று வந்தோம்.

ராமேஸ்வரம் கோவிலுக்கு அருகே இருக்கும் இவரது இல்லம் சிறியது. இல்லறம் பெரியது. நல்லறம் பிரும்மாண்டமானது.! அந்த மகான்கள் அவரது தூய அன்பை மட்டுமே இனம் கண்டு கொண்டார்கள். ஜெயேந்திர பெரியவா தனது குழுவினருடன் வீட்டிற்குள் வந்து அமர்ந்துவிட்டார்.

தொழிற்சாலையிலிருந்து திரு.சுடலை வருவதற்கு சற்று தாமதமாகிவிட்டது. அவரது மனைவி சர்வ சகஜமாய், பதற்றங்கள் ஏதுமின்றி, கிராமிய மனதுடன், “சாமி, வாங்க வீட்டுக்காரர் இப்ப வந்துவிடுவார். நீங்க இருங்க சாமி, குடிக்க தண்ணி ஏதாச்சும் கொடுக்கட்டுமா, பழங்கள் நிறைய இருக்கு, கொஞ்சம் வெட்டித்தரவா?” என்று உபசரிக்கிறார். பெரியவா புன்னகையுடன் அமைதியாகக்காத்திருக்கிறார். சுடலை வந்துவிட்டார். பவ்யமாய் கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கிறார். ஜெயேந்திர பெரியவா, “எனக்காக இந்த தேசமே காத்திருக்கும், நான் உனக்காக காத்திருக்கேன் பாருடா” என்று அன்பாய் அரவணைக்கிறார். இந்த நிகழ்வைச் சொல்விட்டு அதற்கான போட்டோவையும் காட்டிவிட்டு, வெள்ளந்தியாய் சிரிக்கிறார் சுடலை. அவர் செய்யும் காரியங்கள் அனைத்தும் நம்மை வியக்க வைக்கின்றன. எதைத் தொடங்கினாலும் அதனை தடையில்லாமல் ஆயுசு முழுவதும் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

“1987-ல ராதாஸ்வாமிகள் (எனக்கு குரு) என் ஜாதகப்படி என் தொழில் அனைத்தும் அடியோடு போய்விடும் என்றார். அப்படியே நடந்துவிட்டது. இதிலிருந்து மீள்வதற்கு என்னை சனீஸ்வரன் கோவிலுக்கு இரண்டரை வருஷம் போகச் சொன்னார். போக ஆரம்பித்தேன். நல்ல மாற்றம் ஏற்பட ஆரம்பிச்சுது. ஏன் நிறுத்தணும்? கஷ்டம் வந்தாதான் சாமிய கும்பிடனுமா? நல்லா இருந்தாலும் நன்றியோட இருக்க வேண்டாமா? என்று 30 வருஷதததுக்கு மேலே ஆயிடுச்சு, போயிகிட்டு இருக்கேன். அப்படித்தான், 1989 ல ஐயப்பன் கோவிலுக்கு போக ஆரம்பிச்சேன். இன்றுவரை ஒரு வருஷம் கூடத் தவறினதில்லை. 1987-88 ல பாம்பன் ஸ்வாமிகள் வழிபாட்டுக் குழு மூலமா திருப்பதி போக ஆரம்பிச்சேன். தொடர்ந்து, ஆடி ஒன்றாம் நாள் லட்சியமாகக் கொண்டு, ஒவ்வொரு வருஷமும் ஆடி ஒன்றாம் தேதி திருப்பதியில் தரிசனத்துல கண்டிப்பா இருப்பேன்.

எதைச் செய்தாலும் ரொம்பவும் தீவிரமா செய்யறது இவருடைய சிறப்பு குணமாக இருக்கிறது. இவர் செய்துவரும் சமூக சேவைகள் அபாரம். உதாரணமாக ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். கஜா புயல் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு அரிசி, பருப்புக்களை கொடுத்துவிட்டு, அடுத்த வாரம் மேலும் சிறப்பாக செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்து மின்சாரமே இல்லாத மக்கள், இட்லி தோசைக்கு எங்கே போவார்கள் என்று யோசித்து, ஒவ்வொருவருக்கும் 2 கிலோ காய்கறிகள், ஒரு கிலோ அரிசி - பருப்பு, ஒரு கிலோ இட்லி மாவு பாக்கெட் என்று கொண்டுபோய் கொடுத்து, அவர்கள் உடனடியாகவே இட்லி தோசை செய்து சாப்பிடுவதைக் கண்டு மனம் நிறைந்து இருக்கிறார்.



மனிதர்கள் மட்டுமல்ல, இவர் போஷித்துவரும் உயிரினங்களும் ரொம்பக் கொடுத்துவைத்தவைகள் என்று சொன்னால் மிகையில்லை. வீட்டுக்குள் நாய் (10 வருடங்கள்), மீன்கள் (20 வருடங்கள்) என்று போஷிக்கும் இவர், தினந்தோறும் இரண்டு மைல் தொலைவில் உள்ள ஆள் அரவமற்ற, பறவைகளே கண்களில் தென்படாத காட்டுக்குள், யோகா செய்வதற்காக நடந்து சென்று, அங்கே முன்னூறுக்கும் மேற்பட்ட காக்கைகள், நான்கு மயில்கள், நாற்பதுக்கும் மேற்பட்ட அணில்கள், புறாக்கள் என்று அனைத்து ஜீவன்களுக்கும் தீனி கொடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இதற்காக தினம் 2 கிலோ ஊறவைத்து வடிகட்டிய அரிசி, காராபூந்தி, பிஸ்கெட் பாக்கெட்டுகள் (சில காகங்கள் பிஸ்கெட் மட்டும்தான் சாப்பிடுமாம்) இனிப்பு பூந்தி (சில அணில்கள் இதுமட்டும்தான் சாப்பிடுமாம்) பொறிகடலை என்று எடுத்துச் செல்கிறார். (இதற்கான புகைப்படங்கள், வீடியோக்களை காண்பிக்கிறார்) எப்படி கண்டு பிடித்தீர்கள் என்றால், அனுபவத்தில்தான் என்கிறார். இவைகளை விட்டு இவர் பிரிவதில்லை தவிர்க்க முடியாத சூழலில் தனது நண்பர் ஒருவரை ஏற்பாடு செய்துள்ளார்.

உறவுகளுக்கும் தன் சக்திக்கு மீறி திருப்திப் படுத்துகிறார். ஊர் குழந்தைகளை சந்தோஷப்படுத்த வித்தியாசமாக ஏதாவது செய்கிறார். அவற்றில் ஒன்று தான் டில்லியில் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களை சந்திக்க வைத்த நிகழ்வு.

இதெற்கெல்லாம் இவரது மனைவி எப்படி ஒத்துழைக்கிறார் என்று கேட்டால், “அவள் எனக்குக் கிடைத்த வரம் அம்மா. எதற்கும் தடை சொல்லமாட்டாள், உதிர்த்து ஒரு வார்த்தை சொல்லமாட்டாள். ‘‘நீங்கள் உழைத்து சம்பாதிக்கிறீர்கள். உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்’’ என்று எனக்குத் துணையாகத்தான் நிற்பாள். என் பெயரில் எதுவும் வைத்துக் கொள்ளவில்லையம்மா. எல்லாம் இவளிடம் ஒப்படைததுவிட்டு, நான் அவளிடமிருந்து பெற்றுக் கொள்கிறேன். எல்லாவற்றையும் அவளிடம் கலந்து ஆலோசித்து விட்டுத்தான் செய்வேன். நாலாம் வகுப்புத்தான் படித்திருக்கிறாள். ஆனால் என் தொழிற்சாலையின் கணக்கு வழக்குகள் எல்லாமே அவள்தான் பார்க்கிறாள். அவள் சொல்லும் ஆலோசனைகளை மதித்து செயல்படுத்துகிறேன். உயர்வாகவே வாழ்கிறேன். என் மனைவியும் என் ஒரே மகளும்தான் எனக்கு உயிர் சக்தி, அவர்கள் என்னை இயக்குகிறார்கள், நான் இயங்குகிறேன். அவ்வளவுதான்’’ என்று சொல்லும் இந்த எளிமைக்குள் மிகப் பெரிய தத்துவ ஞானி அமைதியாக வீற்றிருப்பதை என்னால் உணரமுடிகிறது.

இறைவன் கொடுத்துள்ள வாழ்க்கையை எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறார்கள் சுடலை தம்பதிகள். மனமார வாழ்த்தி விடைபெற்றோம்.

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**


**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |



G. SIVAGAMASUNDARI 99940 89133



N. GURUMURTHY 99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals, Tiffin & Marriage Sear Variation in Order*



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.

**திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்**

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **10.02.2020 திங்கட்கிழமை, 08.03.2020 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 04.04.2020 சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**திருக்கோயில் உழவாரப்பணி**

**உழவாரப்பணி** வரும் **02.02.2020** ஞாயிறு காலை **திருமால்பூர் அருள்மிகு அஞ்சனாட்சி அம்பாள் உடனுறை மணிகண்டேஸ்வரர் திருக்கோயிலில்**